**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலை கலாசார பீடம்**

**மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்பு கலைமாணித் தேர்வு**

**2014/2015 (*December 2019*)**

**OGY 3243 சுற்றுலா அபிவிருத்தியும் முகாமைத்துவமும் (*Tourism Development and Management*)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி *I* இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி *II* இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி *I*

**1.** அ) சுற்றுலா என்பதனை உலக சுற்றுலா நிறுவனம் எவ்வாறு வரையறுத்துள்ளது? (05 புள்ளிகள்)

ஆ) சுற்றுலாத்துறையின் சிறப்பான இயக்கத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளை ஆராய்க. (15 புள்ளிகள்)

**2.** அ) இலங்கையின் சுற்றுலா விருத்திக்கு ஏதுவான காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ) "ஒரு நாட்டில் நிலவும் அமைதியான சமாதானமான சூழலே சுற்றுலாப் பயணிகளின் வருகையினைத் தீர்மானிக்கின்றது" இக்கூற்றிற்கான பொருத்தப்பாட்டினை 1966 தொடக்கம் தற்காலம் வரையான காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் தரவுகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.

(14 புள்ளிகள்)

**3.** அ) சுற்றுலாத் திட்டமிடலின் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் சுற்றுலாத் திட்டமிடல் அண்மைக்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்க. (12 புள்ளிகள்)

## பகுதி *II*

**4.** "மருத்துவச் சுற்றுலாவானது செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலா இடைவெளியினை அதிகரித்துள்ளதோடு உள்ளூர் மக்கள் சுகாதார வசதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களைக் குறைத்துள்ளது" இக் கூற்றி பொருத்தப்பாட்டினை மருத்துவச் சுற்றுலாவினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க

(20 புள்ளிகள்)

**5.** சுற்றுலாத்துறை விருத்தியால் ஏற்படக்கூடிய சாதக, பாதக விளைவுகள் தொடர்பா ஆராய்க.

(20 புள்ளிகள்)

**6.** "பாரிய சுற்றுலாத்துறையினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களைக் களைவதற்காகவே சூழல்சார் சுற்றுலா போன்ற மாற்றுச் சுற்றுலாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன". இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை பாரிய சுற்றுலா மற்றும் சூழல்சார் சுற்றுலா என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

**7.** பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) சூழல்சார் சுற்றுலா விடுதியும் அடிப்படைப் பண்புகளும்

ஆ) இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா விருத்தி

இ) இலங்கையில் கலாச்சார சுற்றுலாவின் அண்மைக்காலப் போக்கு

(2x10=20 புள்ளிகள்)